# கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இடைநிலை வகுப்பு மாணவர்களது இசைக்கல்வியின் இன்றைய நிலை

**கி. கருணா**

இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம், இலங்கை
kkaruna67@yahoo.com

**சுருக்கம்:** இசை உளவியல் ரீதியாக மனித உள்ளத்தைச் சமநிலைப்படுத்தும் ஒரு அம்சமாகக் காணப்படுகின்றமை இவ் ஆய்வின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது. கல்வி ஒரு மனித உரிமையென பிள்ளைகள் உரிமை பற்றிய சர்வதேசப் பிரகடனங்களும், பிள்ளைகள் உரிமை தொடர்பான சமயவாயங்களும் எடுத்துக்காட்டி வந்துள்ள நிலையிலும், போரின் பாதிப்புக்கு உள்ளான பிரதேசங்களிலே கல்விசார் பிரச்சினைகள் பல உள்ளன. வடமாகாணத்தில் இறுதியாக உருவாக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டமானது கல்வி அபிவிருத்தியில் முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருந்த சமயம் போரின் பாதிப்பினால் அம்முன்னேற்றம் தடைப்பட்டு பின்னடைவுக்குள்ளானது. இதனால் இம்மாவட்டம் பல சவால்களை எதிர்நோக்கியுள்ளது. தற்போது மீள்குடியேற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், கல்வி அபிவிருத்தி சிறப்படைவதற்கான சூழல் மிகவும் பின்தங்கியதாகவே உள்ளது. இந்நிலையில், இசையானது உளவியல் ரீதியாக மனித உள்ளத்தைச் சமநிலைப்படுத்தும் ஓர் அம்சமாகக் காணப்படுவதால், கிளிநொச்சி மாவட்டத்தில் இடைநிலை வகுப்பு மாணவர்களது இசைக்கல்வியின் இன்றைய நிலையை அறிந்துகொள்வதும், இசைக் கல்வி கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகளைக் கண்டறிவதும் இந்த ஆய்வின் குறிக்கோள்களாக உள்ளன. கிளிநொச்சி மாவட்டமானது கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய நான்கு கோட்டங்களைக் கொண்டுள்ளது. இந்நான்கிலும் உள்ள 63 பாடசாலைகளிலிருந்து எழுமாற்று முறையில் தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலைகளை மாதிரியாகக்கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் மூலம், இம்மாவட்டத்தில் இசைக்கல்வி கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெறுவதற்குத் தடையாக அமையும் காரணிகளாக பின்வருவன இனங்காணப்பட்டன: (i) இசை ஆசிரியர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றமை, (ii) இசை ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் திறன்களை இற்றைப்படுத்தலில் பிரச்சினைகள் உள்ளமை, (iii) இசை ஆசிரியர்கள் சேவை செய்வதற்கான ஊக்குவிப்புக்கள் போதுமானளவு காணப்படாமை, (iv) பாடத்திட்டங்கள் உரிய காலப்பகுதிக்குள் நிறைவு செய்யப்படாமை, (v) சில பாடசாலைகளில் இசைக் கல்வி கற்பதற்கான வகுப்பறை இல்லாமை, (vi) விடுதி வசதிகள், சீரான போக்குவரத்து வசதி, உணவு, குடிநீர் போன்ற அடிப்படைகளுக்குச் சிரமப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றமை, (vii) சில பாடசாலைகளுக்கு இசை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டும், அவர்கள் தம் கடமைகளுக்குச் செல்லாமல் இருக்கின்றமை, (viii) பாதுகாப்பற்ற சூழலாக உணர்கின்ற தன்மை, (ix) மாணவர் மனம் பாதிப்படைந்து காணப்படுகின்றமை, (x) குடும்ப வறுமை காரணமாக இசைக்கல்வியில் பிரத்தியேக போதனையைப் பெறமுடியாமை, (xi) இசைக்கல்வி சம்பந்தமான விழிப்புணர்வு பெற்றோரிடத்தில் காணப்படாமை.